ந.க.எண். 66/2010/அ1 **ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலம்**
**நாள் : 09.06.2010**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 25–06–2010–ம் தேதி **வெள்ளி கிழமை** பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட **இரண்டு உறை முறை,** ஒப்பந்தப்புள்ளி முறையில் உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி சமர்ப்பிக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 25–06–2010 ம் தேதி **வெள்ளி கிழமையன்று** பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 24.06.2010 –ம் தேதி **வியாழக் கிழமை மாலை** 5.00 மணி வரை பட்டியலில் கண்டுள்ள தொகையை இப்பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி ரசீது உடன் பெற்றுக் கொள்ளலாம். மேலும், ஒப்பந்தப்புள்ளிபடிவங்கள் பெற்றுக் கொள்ளும் போது எந்த வேலைக்காக பெறப்படுகிறதோ அந்த வேலைக்காக தொகை ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும். மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

ஒப்பந்த ஆவணங்கள், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, சொத்து மதிப்பு (Salvency) தொகை மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மேலும் **http://www.tenders.tn.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/ tender** என்ற இணையதள முகவரியிலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை இறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1) ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மற்றும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள தகுதியுடைய இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் பதிவு செய்ய உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.

2) ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்திய ரசீது அல்லது வங்கி வரைவோலை இணைக்க வேண்டும். இவைகள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3) வங்கி வரைவோலையானது, செயல் அலுவலர், ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சி என்ற பெயரில் டிமாண்ட் டிராப்டாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் மாற்றத்தக்க வகையில் எடுக்கப்பட வேண்டும்.

4) செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ, கேட்பு வரைவோலையாகவோ செலுத்தலாம்.

5) மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் (உறை 1 மற்றும் 2) ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். உறை 1 மற்றும் உறை 2 ஐயும் மேல் உறையிட்டு (Outer cover) ஒட்டி மூடி முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு உறையின் (கவரின்) மீதும் எந்த வேலைக்கு என்பதை தெளிவாக எழுதி செயல் அலுவலர், ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் என பெறுநர் முகவரியும், அனுப்புநர் முகவரியும் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

6) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தபுள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

7) வரப்பெற்று முடிவு செய்யபட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

8) ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் ரூ. 20/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் செயல் அலுவலர் தெரிவிக்கும் வாசகப்படி உடன்படிக்கை எழுதித் தர வேண்டும்.

9) வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே முழு பொறுப்பாவார்கள்.

10) ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 9 பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரரில் வைப்புத் தொகைகளும் எவ்வித அறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்படும். ஏற்படும் இழப்பிற்கு தங்களை பொறுப்பாக்கி சட்ட ரீதியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

11) குறிப்பிட்ட காலகெடுவிற்கும் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரரால் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

12) ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் மற்றும் தார் (80/100 Grade மற்றும் Emulsion) வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் மற்றும் தார்க்கு தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

13) கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் செயல் அலுவலர் அல்லது பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

14) யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

15) மதிப்பீடு விகிதத்திற்கு மிக குறைவாக ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளதாக செயல் அலுவலர் கருதுவாராகின் செயல் அலுவலரால் தெரிவிக்கப்படும் சதவிகிதத்தில் கூடுதல் வைப்புத் தொகை ஒப்பந்தக்காரர் கண்டிப்பாக செலுத்திய பிறகே வேலை உத்திரவு வழங்கப்படும். கூடுதல் வைப்புத்தொகை செலுத்தப்பட வில்லை எனில் ஒப்பந்த வைப்புத்தொகை பறி முதல் செய்யப்படும்.

16) வேலையை முடித்த பின்னர் பட்டியல் விதிமுறைகளுக்கு உட்பட்டு தொகைகள் பிடித்தம் செய்யப்பட்டு மீதித் தொகை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

17) பணி முடிக்கப்பட்டு பட்டியல் தொகை பெறுவதற்கு முன்பாக மதிப்பீட்டு தொகையில் 0.30 % சதவீத தொகையினை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல நிதி சென்னை என்ற முகவரிக்கு வங்கி கேட்பு வரைவோலையாக எடுத்து செயல் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

18) தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத் தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

19) வேலைகள் சம்பந்தமாக அவ்வப்போது அரசினால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

20) ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் துறை நடவடிக்கையான அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதை ஒப்பந்தக்காரர் தவிர்க்க வேண்டும்.

21) தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள டெண்டர் விதி 2000 உட்பட்ட ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட வேண்டும். தவறும் பட்சம் தங்கள் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

## <u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) ஒப்பந்தக்காரர், இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

2) டேவணித் தொகைக்கான செலுத்துச் சீட்டு / வங்கி வரைவோலை, முன் அனுபவச் சான்றிதழ், ஒப்பந்தக்காரர் வகுப்புத் தகுதிச் சான்றிதழ், (தகுதி குறைந்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கத் தகுதியற்றவர் ஆவர்). நிதி நிலை அறிக்கை, விற்பனை / வருமான வரிச் சான்றிதழ் போன்ற விவரங்களை ஒரு உறையில் (உறை 1) வைத்து, உறையின் வெளிப்புறத்தில் “Technical Bid” என்று குறிப்பிடப்பட வேண்டும்.

3) மற்றொரு உறையில் (உறை 2) பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் படிவம் வைத்து அவ்வுறையின் வெளிப்புறத்தில் “Price Bid” என்று குறிப்பிடப்பட வேண்டும்.

இதில் முதலில் “Technical Bid” என்று குறிப்பிட்டுள்ள உறை ( உறை 1) பிரிக்கப்பட்டு, அதில் வைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தேவையான விவரங்கள் தகுதியாக இருந்தால் மட்டுமே “Price Bid” என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டாவது உறை (உறை 2) திறக்கப்படும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தகுதியானதாக இல்லையெனில் “Price Bid” உறை திறக்கப்பட மாட்டாது,.

ஒப்பந்தக்காரர் கடந்த 5 ஆண்டுகளில் ஏதாவது 2 ஆண்டுகளில் மேற்கண்ட வேலையின் மதிப்பீட்டுத் தொகை போல மொத்தப் பணிகள் இரண்டரை மடங்குக்கு

குறையாமலும் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளில் மேற்காணும் வேலையில் கண்டுள்ள பணி போன்று ஒன்றினை மதிப்பீட்டைப் போல் ½ மடங்கு சாலைப் பணி செய்து முடித்திருக்க வேண்டும். அதற்கான சான்றொப்பம் பெற்று சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். இது போன்ற முன் அனுபவ சான்றிதழ்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

4) தார்சாலை அமைப்பதற்கான தேவையான சாலை உருளை மற்றும் Bitumen Plant, Heat Master போன்ற இயந்திரங்கள் சொந்தமாகவோ (அல்லது) வாடகைக்கு வைத்துள்ள ஒப்பந்ததாரர்கள் அதற்கான ஆவணங்களுடன் Technical Bid என்ற உறையில் இணைத்திருக்க வேண்டும்.

5) மேலும் அரசு நிறுவனத்தின் மூலம் நியமிக்கும் ஆலோசகர்கள் [Consultant] ஆய்வின் போது மெட்டல்களை Sieve test போன்ற பணிகள் ஒப்பந்ததாரர் சொந்த செலவில் பரிசோதனைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதர விபரங்களை அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## பட்டியல்

| வ. எண் | திட்டம் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்த நமுனா ( விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் உட்பட) ரூ | வேலை முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தக் காரரின் தகுதி (புதிய வகுப்பில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | **<u>அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம்</u>**<br><br>ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட சொந்தமான வாரச்சந்தையில் வணிகவளாகம் கட்டுதல் | 20.00 | 40000 | 6240 | 3 மாதங்கள் | (ரூ.15 இலட்சம் முதல் 30 இலட்சம் மூன்றாம் வகுப்பும் அதற்கு மேலும்) |
| 2 | ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட பொய்கைகுளம் அருகில் ஒரு திறந்தவெளி கிணறு அமைத்தல் மற்றும் மிஷன் காம்பவுண்ட் பகுதியில் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைநீர்தேக்கத்தொட்டி கட்டி பைப்லைன் நீட்டித்தல் | 15.00 | 30000 | 6240 | 3 மாதங்கள் | (ரூ.6 இலட்சம் முதல் 15 இலட்சம் – நான்காம் வகுப்பும் அதற்கு மேலும்) |
| 3 | ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட சிவந்தி ஆதித்தனார் திருமண மண்டபம் பின்பக்கம் தெருக்கள் சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.00 | 10000 | 780 | 3 மாதங்கள் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட காந்திநகர் செல்லும் சாலை தார்சாலை அமைத்தல் | 10.00 | 20000 | 1560 | 3 மாதங்கள் | (ரூ.6 இலட்சம் முதல் 15 இலட்சம் – நான்காம் வகுப்பும் அதற்கு மேலும்) |
| 5 | ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட 17 வது வார்டு மூவேந்தர் நகரில் சுடுகாடு மேம்பாடு செய்தல் | 5.00 | 10000 | 780 | 3 மாதங்கள் | |

செயல் அலுவலர்,
ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்.

பெறுநர்:

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்,
ஆரல்வாய்மொழி தேர்வுநிலை பேரூராட்சி.
**(அஞ்சலிட்ட சான்று மூலம்)**

**நகல்:–**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர் நாகர்கோவில் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள் பிரிவு, பேரூராட்சிகள், நாகர்கோவில்
4. தொகுதி இளநிலைப் பொறியாளர், ஆரல்வாய்மொழி பேரூராட்சி
5. பேரூராட்சி செயல் அலுவலர்கள், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பேரூராட்சிகள் (விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய)
6. ஆணையாளர், தோவாளை ஊராட்சி ஒன்றியம் (விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய)
7. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
8. சம்பந்தப்பட்ட இணையதளங்களுக்கு
9. தலைவர் அவர்கள் மேஜைக்கு தகவலுக்காக.